***<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD.</u>***

***<u>DATE : 24.03.2026</u>***

| | |
|---|---|
| Case No. | : OS.24/2022 |
| Deposition of Witness for Plaintiff | : PW.1 |
| Name | : சாந்தி, க/பெ. விஜயகுமார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of March 2026

**<u>(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 12.59.P.M.)</u>**

**<u>2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் 32/92A லாங்கில்பேட்டை என்ற விலாசத்தில் குடியிருந்து வருகின்றேன். தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் என்னவென்றால் நினைவில் இல்லை. வழக்கு சொத்து செக்கு பந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் - ஜான் பீட்டர் நிலமும், தெற்கில் எனது அனுபவத்தில் உள்ள நிலமும், கிழக்கில்-கந்தசாமி வீடும், மேற்கு-ராஜீ மூர்த்தியின் வீடு உள்ளது. வழக்கு சொத்து மொத்த சதுரடி என்னவென்றால் 5 செண்ட் நிலமாகும், சதுரடியாக தெரியாது. எனது வழக்குரையிலும் வழக்கு சொத்தின் சதுரடி குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தந்தைக்கு சொந்தமானது என பட்டா தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

2. தாவா சொத்து சம்மந்தமாக எனது தகப்பனார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் முத்துமாணிக்கம், விஜயன், ஈஸ்வரி, மாதம்மாள், ராஜீ, மூர்த்தி ஆகியோர் மீது தாக்கல் செய்தார். எனது தகப்பனார் பிரதிவாதிகள் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும், விஜயன், முத்துமாணிக்கம், செல்வி ஆகியோர்கள் தான் சாந்தி, விஜயகுமார், சகிலா, சரஸ்வதி, சோபனா ஆகியோர்கள் மீது அசல் வழக்கு எண்.418/2016 என்ற வழக்கு தாக்கல் செய்தனர் என்றால் அவ்வாறு செய்ததாக எனது தந்தை என்னிடம் சொன்னார். எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

எனது தகப்பனார் அசல் வழக்கு எண். 937/2009 என்ற வழக்கு அரசிற்கு எதிராக தாக்கல் செய்தார் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியும். எந்த பரிகாரத்திற்காக தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.9 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் அசல் வழக்கு எண்.937/2009 லிருந்து சான்றிட்ட நகலாக பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனாரால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.937/2009 தள்ளுபடி ஆகிவிட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதன்பின்னிட்டு எனது தகப்பனார் அ.வ.எண்.59/2012 என்ற வழக்கினை அரசிற்கு எதிராக தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கானது தள்ளுபடி ஆகிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி இரண்டு வழக்குகளிலும் எனது தகப்பனார் ஏதேனும் விளம்புகை பரிகாரம் பெற்றாரா என்றால் இல்லை, தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. கிராம நத்தம் சர்வே எண்.15/12–ல் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் அதுபற்றி தெரியாது. சர்வே எண்.15/12–ல் எந்த திசையில் உள்ளோம் என்று நிரூபணம் செய்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை, வீட்டு வரி ரசீது மற்றும் நிலத்திற்கான கிஸ்து ரசீது தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்காக விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, நிலத்தின் அளவிற்கேற்ப ரூ.45/– கட்டியுள்ளோம். நிலத்தின் அளவிற்கேற்ப கந்தாய ரசீது அரசாங்கம் வசூலிப்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணிற்கு கந்தாய ரசீது பெறப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை.

5. எனது தகப்பனார் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 ஆவணத்தில் சொத்தின் நீளம் மற்றும் அகலம் குறித்த அளவீடு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தில் ஆக்கிரமிப்பினை அகற்ற சொல்லி அரசாங்கத்தில் அறிவிப்பு தரப்பட்டதா என்றால் தரப்பட்டது. அரசின் அறிவிப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தான் அ.வ.எண்.59/2012 என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணமானது கலர் நகல் என்றால் சரியல்ல, அசல் போன்று தான் உள்ளது. வா.சா.ஆ.14 ஆவணமானது கலர் நகல் என்றும், போலியாக வா.சா.ஆ.14 ஆவணத்தினை தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்திற்கு பட்டா எண். பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் பட்டா எண் என்னவென்றால் பட்டா எண் பற்றி தெரியாது. தாவா சொத்திற்கு பட்டாவே இல்லை என்றும், பட்டா உள்ளதாக பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான சங்கதியை குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

6. எனது பிரமாண வாக்குமூலத்தில் 18.01.2012-ம் தேதியன்று கிராம நிர்வாக அலுவலர் எனது தந்தை கட்டிய வீட்டினை இடிக்க முற்பட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி கிராம நிர்வாக அலுவலரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அரசாங்கத்திற்கு எதிராக உத்தரவு பெறவேண்டி தனிபட்ட நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து பின்னிட்டு வழக்கு நிலுவையில் இருக்கும்போது மீண்டும் அரசாங்கம் சம்மந்தப்பட்ட நபர்களை சேர்க்க இடை மனு தாக்கல் செய்தேனா என்றால் சரிதான், எனது தந்தை 2015-ம் ஆண்டு இறந்ததன் பின்னிட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்தேன். அதன்பின்னர் வருவாய் அலுவலர்களுக்கு எதிராக வாரிசு அடிப்படையில் நான் வருவதால் அவர்களை இடையீட்டு மனுவின் மூலம் தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்தேன்.

7. இ.ம.எண்.3/2022 ஆனது அரசாங்கத்திற்கு எதிராக தமிழ்நாடு ஆக்கிரமிப்பாளர் சட்டப்படி வழக்குரையை திருத்தம் செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி மனுவிலும் தாவா சொத்து

எங்களுக்கு சொந்தமானது என விளம்புகை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இத்தாவா வழக்கும், இதற்கு முன்னர் எனது தகப்பனாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். திருத்த மனு தாக்கல் செய்தது பின்னிட்டு அரசாங்கத்தை வழக்கில் சேர்க்க தேவையில்லை என முதல் நிலை வழக்கெழு வினா வனைந்து அதில் ரூ.3,000/- வருவாய் அலுவலகத்தில் செலுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேல்முறையீட்டு வழக்கு சம்மந்தமாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி தெரியாது.

8. எனது தகப்பனார் எந்த வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு சென்றார் என்றால் அதுபற்றி தெரியாது. மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், பிரமாண பத்திரக்கையிலும் பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக சொல்லவில்லை என்றும், அரசாங்கம் இடையூறு செய்யதாகவே சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் இடையூறு செய்யததாகவும் குறிப்பிட்டுள்ளோம். எனது தகப்பானர் இறந்ததன் பின்னிட்டு அ.வ.எண்.59/2012 தொடர்ச்சியாக தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். பிரதிவாதிகள் அனைவரும் எங்கு குடியிருக்கிறார் என்றால் சேலம், ஜான்சன் பேட்டையில் குடியிருந்து வருகிறார்கள்.

9. தாவா சொத்து ஏற்காடு, போட்டுக்காட்டில் உள்ளது என்றால் சரிதான். சேலம், ஜான்சன் பேட்டையில் குடியிருக்கும் பிரதிவாதிகள் தான் ஏற்காட்டில் உள்ள தாவா சொத்தில் இடையூறு செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என்ன மாதிரியான இடையூறு செய்தார்கள் என்றால் வீட்டிற்கு முன் குடிசை போட்டார்கள், காப்பி மற்றும் பயிர்களை அங்கிருந்து பிடிங்கி எறிந்துவிட்டனர். எப்போது இடையூறு செய்தார்கள் என்றால் 2014-ம் ஆண்டு செய்தார்கள், தேதி நினைவில் இல்லை. எனது

தகப்பனார் உயிருடன் உள்ளபோதே மேற்படி இடையூறு நடந்து என்றால் சரிதான் 2014-ம் ஆண்டு வருட இறுதியில் நடந்தது. எனது தகப்பனார் உயிருடன் இருந்தபோது பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தில் இடையூறு செய்ததாக புகார் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான்.

10. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சொன்னார் ஆனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் தாவா சொத்து சம்மந்தமாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து வீடு எத்தனை சதுரடியில் உள்ளது என்றால் 400 சதுரடியில் உள்ளது. பிரதிவாதிகள் குடியிருந்த வீட்டில் அத்துமீறி நுழைந்ததாக சொல்லி என் மீது இரண்டு குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

11. பிரமாண பத்திரத்தில் பத்தி 9-ல் சொல்லியுள்ள சங்கதிக்கு ஆதரவாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியரின் நடைமுறை ஆணை எப்போது பிறப்பிக்கப்பட்டது என்றால் 2025-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பிறப்பிக்கப்பட்டது. நான் மாவட்ட ஆட்சியருக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, வருவாய் கோட்ட அலுவலருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் தான் மாவட்ட ஆட்சியர் என்னை விசாரணை செய்தார் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் உத்தரவில் வருவாய் கோட்ட அலுவலர் அறிக்கையினை குறித்து படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.17- பக்கம் 4-ல் சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், தலைச்சோலை தரப்பு, போட்டுக்காடு பகுதியில் புல எண்.15/12-ல் மொத்த விஸ்தீரணம் 0.50.5 Hrs நிலத்தில் 322 சதுரடி நிலத்தினை மனுதாரர் தந்தை குணாளன் த/பெ. பெருமாள் என்பவர் 2007-ம் ஆண்டு முதல் வில்லை வீடு கட்டி அனுபவம் செய்துவந்தார் எனவும், இவருக்கு திருமதி. மல்லிகேஸ்வரி

என்ற மனைவியும், திருமதி. சாந்தி, திருமதி. சசிகலா, திருமதி.சரஸ்வதி, திருமதி. சோபனா என்ற மகள்கள் உள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. வருவாய் கோட்ட அலுவலரின் அறிக்கையின் படி எனது தந்தை 2007–ம் ஆண்டு முதல் தான் குடியிருந்து வருகிறார் என்றும், அதற்கு முன்பிருந்து 40 வருடமாக குடியிருந்தார் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17–ன் படி 322 சதுரடி மட்டுமே எனது தந்தைக்கு சொந்தமானது என்றும், ஆனால் 5 செண்ட் நிலம் சொந்தம் என பொய்யான சங்கதிகள் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவில் நான் 322 சதுரடி சொத்தில் 17 வருடமாக அனுபவம் செய்து வருவதால் ஆக்கிரமிப்பினை அகற்ற முடியவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் 322 சதுரடி நிலத்தினை பொறுத்தவரையில் நத்தம் வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் G.O.(MS).No.1168 நாள். 25.07.1989–ன் படி பட்டா வழங்கயிலாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. தாவா சொத்தான 5 செண்ட் நிலத்தில் நான் குடியிருக்கவில்லை என்றும், பிரதிவாதிகள் அருகில் வீடுகட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றும், அதனை மறைத்து 5 செண்ட் நிலத்தில் குடியிருந்து வருகின்றனர் என்ற பொய்யான சங்கதியினை சொல்லி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் CC.No.39/2022 மற்றும் 41/2022 என்ற வழக்கில் நாங்கள் குற்றமற்றவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அதனை எத்தனையாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் காட்டப்பட்ட வழக்கு ஆவணங்களில் மேற்படி ஆவணம் இல்லை.

14. பிரமாண வாக்குமூலத்தில் மேல்முறையீட்டு மனு எண்.88/2025 குறித்து வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரமாண

வாக்குமூலத்தில் பத்தி 7 மற்றும் 8–ல் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் பற்றி வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகளை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையில் உள்ள சங்கதிகள் பற்றி தெரியாது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 10–ல் பிரமாண பத்திரத்தில் பிரதிவாதிகள் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தினை குறித்து எனக்கும், எனது சகோதரிகளான வாதிகளுக்கும் விளம்புகை பரிகாரம் கோரி இடையீட்டு மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

15. கிராம நத்த நிலம் என்றும், மேற்படி அரசாங்கத்திற்கு சொந்தமான நிலத்தினை விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருப்பது ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த காலத்தில் தாவா சொத்தில் இடையூறு செய்யவில்லை என்றும், பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் நாங்கள் தான் எவ்வித உரிமையுமின்றி இடையூறு செய்து வருகின்றோம் என்றால் சரியல்ல. வழக்கினை தாக்கல் செய்தது பின்னிட்டு பிரதிவாதிகளுக்கு நான் தான் இடையூறு செய்து வருகின்றேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு உரிமையானது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் எனது தகப்பனாரால் முந்தைய வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கு உரிமை இல்லை என உத்தரவு இருந்தும், மேற்படி ஆவணங்களையே இந்த வழக்கில் தாக்கல் செய்து அதன் அடிப்படையில் பரிகாரம் கோரியிருப்பதால் இவ்வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

16. தாவா சொத்தான 5 செண்ட் நிலத்தில் சுவாதீனம் இருப்பதற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17–ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குமூலமும் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. மாண்புமிகு சேலம் கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.88/2016–ல் 13.06.2016–ம் தேதியன்று தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் 5–ம் பாராவில் 7–8 பிரதிவாதிகளை பொறுத்து வாதிகள் ஒரே தாவா சொத்தை பொறுத்து மீண்டும் வழக்காடி வருகின்றனர், எனவே CPC பிரிவு 151–ன் படி நீதிமன்ற நடவடிக்கைகளை கேலிகூத்தாக்கும் வகையில் 7–8 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதிகளின் இந்த அசல் வழக்கு இந்நீதிமன்றத்தால் தடுத்த நிறுத்தப்படவேண்டியுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. வழக்கின் ஒட்டுமொத்த சூழ்நிலை மற்றும் தன்மையை கருத்தில் கொண்டு 7–8 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகள் தாக்கல் செய்த இந்த அசல் வழக்கு எண்.937/2009 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் படி தடைப்பட்டுள்ளதால் 7–8 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதிகளின் இந்த அசல் வழக்கு ரூ.3,000/–ம் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே வழக்கு மூலத்தினை வைத்து தொடர்ந்து தாக்கல் செய்யப்படகூடிய இந்த தாவாவானது முன்தீர்ப்பு தடை கேட்பாட்டின் படி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. இத்தாவாவில் 7–8 பிரதிவாதிகளை நீக்கம் செய்தது தொடர்பாக எழுதிதரப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

18. வழக்குரையில் சொத்து விவரத்தில் எனது சொத்தினையும், பிரதிவாதிகள் சொத்தினையும் குறித்து தெளிவாக குறிப்பிடப்படவில்லை

என்றால் சரியல்ல. எவ்வித முகாந்திரமும் இல்லாமல் அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

**[மேற்படி குறுக்கு விசாரணை 3 முதல் 6 வரையுள்ள பிரதிவாதிகள் தரப்பின் வழக்கறிஞரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது].**

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 02.20.P.M.)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.24 14:25:38 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.